www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 026
20 யூலை 2010
தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# நரிகேசி உருத்திரகுமாரனின் ஏளன ராஜதந்திரம்





கே.பி மாபியாவின் நாடுகடந்த மன்னனாக விளங்கும் நரிகேசி உருத்திரகுமாரன், தான் இனிமேல் முற்றுமுழுதாக ராஜதந்திர வேலைகளில் மட்டும் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார். அண்மையில் நரிகேசி உருத்திரகுமாரனுடன் தொடர்பு கொண்ட தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவர், நாடுகடந்த அரசை அமைத்து விட்டதாகக் கூறிக் கதிரைகளை சூடாக்குவதை விடுத்து அரசியல் பணிகளில் ஈடுபடுமாறு வலியுறுத்தியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நரிகேசி உருத்திரகுமாரன், தான் நாடுகடந்த அரசாங்கத்தின் அரசுத் தலைவர் என்றும், இந்த வகையில் இனிமேல் தான் ராஜதந்திர வேலைகளில் மட்டும் ஈடுபடப் போவதாகவும், பராக் ஒபாமா, டேவிட் கமரூன் போன்ற உலக நாடுகளின் தலைவர்களுடன் நேரடியாகப் பேசுவதற்கு தான் முயற்சித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். ஒரு அரசுத் தலைவர் என்ற வகையில் நாடுகளின் அதிபர்களுடனும், பிரதமர்களுடனும் மட்டுமே தான் பேசுவது பொருத்தமானது என்றும், தனது அமைச்சர்கள் அனைவரும் இனிமேல் வெளிநாடுகளின் அமைச்சர்களுடன் மட்டுமே பேசுவார்கள் என்றும் நரிகேசி உருத்திரகுமாரன் கூறியுள்ளார்.

அத்தோடு இனிவரும் காலங்களில் எந்தவிதமான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் போன்றவற்றிலும் ஈடுபட வேண்டாம் என்று நாடுகடந்த அரசாங்கத்தின் உறுப்பினர்களிடம் தான் கட்டளையிட்டிருப்பதாகவும், ஊர்வலங்களில் ஈடுபடுவது ஒரு அரசாங்கத்தின் வேலை இல்லை என்றும் நரிகேசி உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே பிரான்ஸில் கடந்த வாரம் நடைபெற்ற விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற நரிகேசியின் அமைச்சரான பாலா என்பவர், தனது வாகனத்தை அங்கி



ருந்த பணியாளர்கள் சோதனையிடுவதற்கு அனுமதி மறுத்துள்ளார். தான் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர் என்றும், தனது வாகனத்தை சோதனையிடுவது ராஜதந்திர மரபுகளை மீறும் செயல் என்றும், அதனையும் மீறித் தனது வாகனம் சோதனையிடப்பட்டால், இதுபற்றி பிரெஞ்சு அதிபர் நிக்கொலாஸ் சார்க்கோசியிடமும், பிரெஞ்சு வெளியுறவுத் துறை அமைச்சிடமும் தான் முறையிடப் போவதாகவும் பாலா மிரட்டல் விடுத்துள்ளார்.

அத்துடன் தனது வாகனத்தில் எவராவது கைவைத்தால், அதன் விளைவாக பிரெஞ்சு அரசாங்கத்திற்கும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கும் இடையில் ராஜதந்திர முறுகல்நிலை ஏற்படும் என்றும், நரிகேசி உருத்திரகுமாரனின் உருத்திரதாண்டவத்தை பிரெஞ்சு அரசாங்கத்தால் தாங்கிக்கொள்ள முடியாது என்றும், பாலா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**இன்னும் வரும்...**

**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுபன் எனது தேசியத் தலைவர்! தனம் பிரடகனம்

சுதிர் அல்லது சுகி என்றழைக் கப்படும் இராமு சுபன் அவர்களே தனது தேசியத் தலைவர் என்று தனம் என்றழைக்கப்படும் றூபேட் பிரகடனம் செய்துள்ளார்.

இலண்டனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (18.07.2010) மூடப்பட்ட அறை ஒன்றில் நடைபெற்ற கூட்டம் ஒன்றி லேயே இவ்வாறு தனம் தெரிவித் திருப்பதாக கறுப்பின் புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன.

இராமு சுபனின் தலைமையி லேயே தான் இயங்கி வருவதாகவும், தன்னைப் பற்றி மக்களிடையே சிலர் விசமத்தனமான பரப்புரைகளில் ஈடுபடு வதாகவும், இவற்றை விரைவில் தான் முறியடிக்கப் போவதாகவும் தனம் சூளு ரைத்துள்ளார். அத்தோடு தன்னைப் பற்றிக் குற்றம் சுமத்துபவர்கள் தனது தேசியத் தலைவன் இராமு சுபனிடம் முறைப்பாடுகளை செய்யலாம் என்றும், தன்னைக் குற்றவாளி என்று சுபன் தீர்ப்பளித்தால் ஒதுங்கிக் கொள்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் தனம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஏறத்தாள 17 வருடங்களாக தமிழ்த் தேசியப் பணியில் முழுநேரமாக ஈடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் தனத்தின் பெயரில் இலண்டனில் வீடு ஒன்றும், எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றும் இருப்பதாக தகவல்கள் கசிகின்றன.



இலண்டனுக்கு வருவதற்கு முன்னர் பரிஸில் வசித்து வந்த தனம், பாசையூரில் கிறிஸ்துவ சமூகத்தை சேர்ந்த பிரமுகர் ஒருவரை தமிழீழ விடுதலைப் புலிகள் படுகொலை செய்ததாகக் கூறி, மனோ என்றழைக் கப்படும் வேலும்மயிலும் மனோக ரனிடம், தமிழீழ விடுதலைப் புலிக ளைக் கண்டித்து 1980களின் இறுதியில் மனு ஒன்றைக் கையளித்திருந்ததை இத்தருணத்தில் கறுப்பு நினைவூட்ட விரும்புகின்றது.



# தமிழ் ஊடகங்களை கையகப்படுத்தும் தனம்

இலண்டனில் உள்ள தமிழ் ஊடகங்களைக் கையகப்படுத்தி கே.பியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் தனம் என்றழைக்கப்படும் றூபேர்ட் ஈடுபட்டு வருகின்றார்.

ஏற்கனவே கே.பி குழுவின் ஊடகமாக விளங்கும் ஜி.ரி.வியின் நிகழ்ச்சிப் பணிப்பாளராகத் திகழும் தனம், தற்பொழுது அனைத்துலக உயிரோடை தமிழ் (ஐ.எல்.சி தமிழ்) என்ற வானொலியை கே.பியிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுவதாக கறுப்பிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

கே.பி குழுவை சேர்ந்த சுவிஸ் அன்ரன் பொன்ராஜாவின் ஆசான் ஏ.சி.தாசீசியஸ், தேசவிரோதி கருணாவை மதிப்பிற்குரிய அமைச்சர் என்று அழைத்த கொட்டடிக் குத்தியன் என்றழைக்கப்படும் பஸ் ஸ்ராண்ட் அறிவிப்பாளர் எஸ்.கே.ராஜன் ஆகியோர் அனைத்துலக உயிரோடை தமிழினின் பணிப்பாளர்களாக உள்ளனர்.

தற்பொழுது நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இந்த வானொலிக்கு கே.பி குழு ஊடாக நிதியுதவி வழங்கி, அதனைக் கையகப்படுத்துவதற்கு தனம் முற்படுவதாக தெரிய வருகின்றது.